**O.S. No. : 20/2025**

Dated: 06.07.2026

**பி.வா.சா.1: போஜன் ; த/பெ. குட்ட பெள்ளு**

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

9. வாதி கிரையம் பெற்றுள்ள தாவா சொத்திற்கும், எனக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றால் சரிதான். வாதியின் பூமிக்கு நான் எந்தவித உரிமையும் கொண்டாடவில்லை என்றால் சரிதான். பழைய சர்வே எண்ணிலிருந்து புதிய சர்வே எண் கொடுக்கப்பட்டு, உட்பிரிவு செய்யப்பட்ட தாவா சொத்தின் எனக்கு சேரவேண்டிய 4 சென்ட் பூமியையும், மற்றும் அருகில் உள்ள பூமியையும் சேர்த்து உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றும், அந்த உட்பிரிவிற்கு நான் எந்தவித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை என்றும் சொன்னால் சரிதான்.

10. எனது பூமிக்கு மேற்கு பக்கத்தில் A.R. ராமச்சந்திரன் பூமி உள்ளதாக பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள நிலையில், எனக்கு பி.வா.சா.ஆ.1 மூலம் பூமியை விற்பனை செய்தவர்களில் மேற்படி மேற்கு பக்கத்தில் பூமி வைத்துள்ள A.R. ராமச்சந்திரனும் ஒருவர் என்றால் சரிதான். தாவா "A" Schedule சொத்தான R.S. No. 471/2A –ல் உள்ள 25 சென்ட் பூமியில் எனக்கு எந்தவிதமான உரிமையோ, சுவாதீனமோ கிடையாது என்றால் சரிதான்.

11. சர்வே எண் 471/15–ற்கு கிழக்கில் பிரதான சாலை உள்ளது என்றால் சரிதான். அந்த பிரதான சாலையை ஒட்டி சமூகக்கூடம் அமைந்துள்ளது என்றால் சரிதான். பிரதான சாலையிலிருந்து சமூகக்கூடத்திற்கு சென்றுவிடலாம் என்றால் சரிதான். சமுதாயக்கூடத்திற்கு பின்புறத்தில் எனது பூமி உள்ளது என்றால் சரிதான், அது எனக்கு சொந்தமான 2 சென்ட் பூமியாகும், அதுபோக எனக்கு மற்றொரு 4 சென்ட் பூமி உள்ளது.

12. மேற்படி சமுதாயக்கூடத்திற்கு பின்புறத்தில் உள்ள 2 சென்ட் பூமி எனக்கு பாத்தியப்பட்டது என்பதை காண்பிக்க இந்த வழக்கில் ஆவணங்கள் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த சமுதாயக்கூடத்திற்கு பின்புறம் உள்ள 2 சென்ட் பூமி எனக்கு பாத்தியப்பட்டதல்ல என்றால் சரியல்ல, அது எனது பூமிதான். நான் எனது பூமியாக இருந்திருந்தால் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல, அது எனது பூமிதான்.

13. மேற்படி சமுதாயக்கூடத்திற்கு பின்புறம் உள்ள 2 செண்ட் பூமிக்கு பிறகுதான் A.T. சிக்கு என்பவருடைய வீடு உள்ளது என்றால் சரிதான், அவருக்கு அந்த வீட்டுடன் கூடிய 3 செண்ட் பூமி அங்கு உள்ளது, அவர் எனது மாமனார் ஆவார். மேற்படி A.T. சிக்கு என்பவருடைய 3 செண்ட் பூமிக்கு பிறகுதான் எனது 4 செண்ட் பூமி அமைந்துள்ளது என்றால் சரிதான்.

14. எனது 4 செண்ட் பூமிக்கு மேற்கில் வாதியின் 25 செண்ட் தாவா சொத்து உள்ளது என்றால் சரிதான். எனது 4 செண்ட் பூமி அமைந்துள்ள சர்வே எண் 471/13 என்றால் சரிதான். A.T. சிக்கு என்பவருடைய 3 செண்ட் அமைந்துள்ள சர்வே எண் என்ன என்றால் 471/14 ஆகும். நீலகிரி மாவட்டத்தில், படுகர் கிராமங்களில் ஒவ்வொரு வீட்டிற்கும் முன்பும் கேரி என்ற காலி நிலம் இருக்கும் என்றால் சரிதான்.

15. அந்த கேரி என்பது பொதுவான நிலம் என்றால் சரியல்ல, வரிசையான வீடுகள் இருந்தால் அவ்வாறு கேரி என்ற பொதுவான நிலம் அருகில் உள்ள வீடுகளுக்கு செல்வதற்கு விடப்படும், ஆனால் தோட்டத்தில் அவ்வாறு கேரி என்ற காலி இடம் விடப்படுவதில்லை, முந்தைய காலங்களில் படுகர் கிராமங்களில் கேரி என்ற காலி இடம் விடப்பட்டது, ஆனால் தற்போதைய காலங்களில் அந்த கேரி எனப்படும் இடத்தில் அதன் உரிமையாளர்கள் கழிப்பறைகளை கட்டியுள்ளார்கள், தடுத்துள்ளார்கள்.

16. அவ்வாறு கேரியில்தான் எனது கழிப்பறை மற்றும் குளியலறை அமைக்கப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். நான் கேரியில் கழிப்பறை மற்றும் குளியலறை கட்டியுள்ளதற்கு அருகில்தான் வாதியின் தாவா A Schedule பூமி உள்ளது என்றால் சரிதான். நான் சர்வே எண் 471/13–ல் வீடு கட்டியுள்ளதை போல, சர்வே எண்கள் 471/2, 471/3 முதல் 471/14 வரையுள்ள பூமிகளில் வீடுகள் கட்டப்பட்டுள்ளன என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, வீட்டின் உரிமையாளர் பெயர் குறித்து தெரியாமல் என்னால் அந்த சர்வே எண்களில் வீடு உள்ளதா என்று கூற இயலாது.

17. வாதியின் வீடு வேறு இடத்தில் பஸ் நிறுத்தும் அருகில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து எனது வீட்டிற்கு அருகில் உள்ளது என்றால் சரிதான். நான் எனது மாமனார் பூமி மற்றும் எனது 2 செண்ட் பூமி

உள்ளது என்பதை காண்பிக்க சொத்தின் அருகில் உள்ள நபர்கள் யாரையாவது எனது தரப்பில் இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்க போகிறேனா என்றால் இல்லை. வாதியின் தாவா A Schedule சொத்திற்கு எனது வீட்டின் கேரி வழியாகத்தான் வழி உள்ளது என்றால் சரியல்ல.

18. தற்போது என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 ஆவணத்துடன் இணைக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள வழிப்பாதையின் வழியாகத்தான் எனது பூமி, A.T. சிக்குவின் பூமி மற்றும் வாதியின் பூமிக்கு செல்ல முடியும் என்றால் சரியல்ல. அதனால்தான் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் பக்கம்–9–ல் "கிழமேல் விடப்பட்டுள்ள வழித்தடத்தில் நடந்துகொள்ள தங்களுக்கு பாத்தியதை உண்டு" என்று கூறப்பட்டுள்ளது என்றால் ஆவணத்தில் அவ்வாறுதான் உள்ளது, ஆனால் அந்த வழித்தடத்தை தற்போது சமுதாயக்கூடம் கட்டி தடுத்துவிட்டார்கள்.

19. நான் அவ்வாறு பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள வழித்தடத்தில் சமுதாயக்கூடம் கட்டி தடுத்துவிட்டதாக கூறும் நிலையில் நான் எனது பூமிக்கு எவ்வாறு, எந்த வழியில் செல்கிறேன் என்றால் A.B. உச்சன் என்பவரது வீட்டிற்கும், நான் கிரையம் பெற்றுள்ள 2 சென்ட் பூமிக்கும் இடையே 2 அடி இடைவெளி உள்ளது, அந்த இடைவெளி உள்ள பூமி A.B. உச்சன் என்பவருக்கு சேர்ந்த பூமியாகும், அதன் வழியாகத்தான் நான் எனது பூமிக்கு தற்போது சென்று வருகிறேன்.

20. மேற்படி நான் கூறிய A.B. உச்சன் வீட்டிற்கு அருகில் வேறு வீடுகளும் உள்ளது என்றால் சரிதான். அந்த A.B. உச்சன் வீட்டிற்கு அருகில் வேறு யாருடைய வீடுகள் உள்ளது என்றால் பெள்ளையன், ஹிரியன் ஆகியோரது வீடுகள் உள்ளது. மேற்படி A.B. உச்சன், பெள்ளையன் மற்றும் ஹிரியன் ஆகியோரது வீடுகள் உள்ள நிலத்தின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

21. எனது மாமனாரான A.T. சிக்கு என்பவர் கிரையம் பெற்ற ஆவணமான வா.சா.ஆ.7 ஆவணத்திலும், எனது கிரையப்பத்திரமான பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளவாறு கிழமேல் விடப்பட்டுள்ள வழித்தடத்தில் நடந்துகொள்ள பாத்தியதை உண்டு என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.5 கட்டிட வரைபடத்தில் நான் கேரியில் கட்டியுள்ளதாக சொல்லப்படும் கழிவறை

மற்றும் குளியலறை காட்டப்படவில்லை என்றால் சரிதான், அந்த கழிவறை மற்றும் குளியலறை அதற்கு முன்பாகவே பழைய வீடு கட்டும்போதே கட்டப்பட்டுவிட்டது.

22. நான் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் 4 செண்ட் காலி பூமி மட்டும்தான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். நான் மேற்படி காலி இடத்தை கிரையம் பெற்ற பிறகு பி.வா.சா.ஆ.5 ஆவணத்தின் மூலம் கட்டிட அனுமதி பெற்று வீடு கட்டினேன் என்றால் சரியல்ல, அதற்கு முன்பே நான் அனுமதி பெறாமல் ஒரு வீடு கட்டியிருந்தேன், பி.வா.சா.ஆ.5 ஆவணத்தின் மூலம் அனுமதி பெற்று அந்த வீட்டினை மாற்றிக்கட்டினேன், பி.வா.சா.ஆ.5 ஆவணம் முதல் தளம் கட்டியதற்கான அனுமதியாகும்.

23. நான் கூறுவது உண்மையல்ல என்றும், பி.வா.சா.ஆ.5 ஆவணத்தில் தரை தளம் மற்றும் முதல் தளம் கட்டுவதற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, தரை தளத்தை 1990 ஆம் ஆண்டு கட்டினேன், பி.வா.சா.ஆ.5 ஆவணத்தை 2013 அல்லது 2014 ஆம் ஆண்டில் பெற்றுள்ளேன். நான் பி.வா.சா.ஆ.5 ஆவணத்தின் மூலம் காலி பூமியில் கட்டிடம் கட்டத்தான் அனுமதி பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல, முதல் தளம் கட்டுவதற்காகத்தான் அந்த அனுமதியை பெற்றேன்.

24. பி.வா.சா.ஆ.5 ஆவணத்தில் நான் கேரியில் கட்டியதாக கூறப்படும் கழிவறை மற்றும் குளியலறை காட்டப்படவில்லை என்றும் நான் தற்சமயத்தில்தான் 2024 ஆம் ஆண்டு மேற்படி கழிவறை மற்றும் குளியலறை ஆகியவற்றை கேரி பூமியில் கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல, அதை நான் 1990 ஆம் ஆண்டே கட்டிவிட்டேன்.

25. நான் செப்டம்பர் மாதம் 2024–ல்தான் மேற்படி கழிவறை மற்றும் குளியலறையை கேரி நிலத்தில் கட்டினேன் என்றும், அதனால்தான் வாதி அது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல, நான் 1990 ஆம் ஆண்டே அந்த கழிவறை மற்றும் குளியலறையை கட்டிவிட்டேன். நான் கூறுவதுபோல 1990 ஆம் ஆண்டு மேற்படி கழிவறை மற்றும் குளியலறை கட்டியிருந்தால் அதை பி.வா.சா.ஆ.5 கட்டிட அனுமதி ஆவணத்திலும், நான் அனுமதி பெறாமல் கட்டிடம் கட்டியதாக கூறப்படும் கட்டிடத்தின் வரைபடத்திலும்

காட்டியிருப்பேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை.

26. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.4 ஆவணத்தின்படி புதிய கட்டிடம் கட்டுவதற்காகத்தான் பஞ்சாயத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**(வேண்டுகோளின் பெயரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).**

LOGANATHAN PRAKASH

Digitally signed by LOGANATHAN PRAKASH
Date: 2026.07.06 19:11:16 +0530